13 ஜனவரி 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

ஆண்டவரின் திருமுழுக்கு

திருமுழுக்குப் பெற்று அனுப்படுதல்

மாதாந்திர கருப்பொருள்:

**கிறிஸ்துவில் நம்மை இணைக்கிறது**



# மறைப்பரப்புக்கு திருமுழுக்குப் பெற்றோம்

இன்று, நமதாண்டவரின் திருமுழுக்கு விழாவை திருஅவைக் கொண்டாடுகிறது. இயேசுவின் திருமுழுக்கின் போது நிகழ்ந்த குறிப்பிடத்தக்கச் சம்பவங்களை நற்செய்தி வருணிக்கிறது. தந்தை, மகன், தூய ஆவி- திருத்துவ முன்னிலையும் செயல்பாடும் அதில் குறிப்பிடத்தக்கது. உங்கள் திருமுழுக்கின் பொருளை நினைவுப்படுத்தும் வகையில் இந்த விழா அமைகிறது. உங்கள் திருமுழுக்கின் போதும் திருத்துவம் முன்னிலை பெற்று செயல்படுகிறது. திருமுழுக்கின் போது, தந்தை தத்தெடுத்துக் கொள்கிறார், மகன் பாவத்திலிருந்து விடுவிக்கிறார், தூய ஆவி புனிதப்படுத்துகிறார். கடவுளின் அருளும் மீட்பும் கிடைக்கிறது.

முதலாவது, கடவுளின் ஆவியை நீங்கள் பெறுகிறீர்கள், அதனால் உங்கள் உடல் தூய ஆவியின் ஆலயமாக மாறுகிறது. இரண்டாவது, கடவுளின் பிள்ளையாக மாறுகிறீர்கள். மூன்றாவது, பாவத்திலிருந்து நீங்கள் தூய்மை பெறுகிறீர்கள். நான்காவது, கத்தோலிக்கத் திருஅவையின் உறுப்பினராகிறீர்கள். ஐந்தாவது, திரு அவையின் மறைப்பரப்புப் பணியில் பங்கு கொள்ள நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள். பின்னோரு காலத்தில் செய்வது அல்லது ஈடுபடுவது மறைப்பரப்புப் பணி அல்ல. நீங்கள் திருமுழுக்குப் பெற்ற நாளிலேயே, மறைப்பரப்புப் பணி செய்யும் பொறுப்பு உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. “திருமுழுக்குப் பெற்று அனுப்புதல்” என்ற இவ்வாண்டின் பொதுக் கருப்பொருள் மிகவும் பொருத்தமானது. திருமுழுக்கும் மறைப்பரப்புப்பணியும் ஒன்றொன்று பிணைக்கப்பட்டுள்ளது என்பதை இது நினைவுப்படுத்துகிறது. **திருமுழுக்குப் பெற்ற அதே தருணத்தில் மறைப்பரப்புப் பணியை ஏற்றுக் கொண்டோம்.**

நமது பணி என்ன? இதற்கு இன்றைய வாசகங்கள் நமக்கு சில குறிகளை வழங்குகிறது. எசாயா இறைவாக்கினர், ஆண்டவரின் ஊழியர் பற்றிப் பேசும் போது, “நீதி வழங்குவார், உண்மையாகவே நீதியை நிலைநாட்டுவார்”. “பார்வை இழந்தோரின் கண்களைத் திறக்கவும், கைதிகளின் தளைகளை அறுக்கவும் இருளில் இருப்போரை...மீட்கவும்” ஊழியன் அனுப்பப்பட்டார். கொர்னேலியுவின் இல்லத்தில் பேசும் போது பேதுரு, “கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை... எல்லா இனத்தவரிலும் அவருக்கு அஞ்சி நடந்து நேர்மையாகச் செயல்படுபவரே அவருக்கு ஏற்புடையவர்” என்பார். “ஆண்டவர் தம் மக்களுக்கு சமாதானம் அருள்வாராக!” என திருப்பாடல் ஆசிரியரும் கூறுகிறார்.

நமது திருமுழுக்கில், எல்லா மக்களுக்கும் நற்செய்தியை அறிவிக்கும் கிறிஸ்துவின் பணியை நாமும் ஏற்றுக் கொள்கிறோம். குறிப்பாக நீதியையும் உண்மையையும், குணமளிப்பையும், விடுதலையையும், சமாதானத்தையும் தேடும் மக்களுக்கு. இதற்கு ஏற்றாற்போல், 2019 ஜனவரி 15-21 ஐக்கிய வாரத்தை திருஅவை அனுசரிக்கிறது. கத்தோலிக்கர்கள் அனைவரும் எல்லாக் கிறிஸ்துவர்களோடும் ஐக்கியத்தைப் பேண வேண்டும். இதனால் உலகம் முழுவதும் கிறிஸ்து அறியப்படுவார். ✝

**மனுக்குலத்திற்கு நாம் உயிருள்ள இயக்கமாக இருக்க வேண்டுமென கிறிஸ்து விரும்புகிறார்.**

- புனித நாசியசன் கிரோகரி

**Scripture of the Day:**

Is. 42: 1-4, 6-7;
Ps. 28: 1-4, 9-10;
Acts 10: 34-38;
Mt. 3: 13-17

**வாரம் ஒரு வசனம்**

மறைப்பரப்புப் பணி திருமுழுக்குப் பெற்றது முதல் மறைப்பரப்புப் பணி நமது கடமையாக்கப்பட்டுள்ளது

INTERNAL CIRCULATION ONLY
BUL 02/2019

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org




**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ


*2019 ஆம் ஆண்டின் கருப்பொருள்*

# *திருமுழுக்கு பெற்று அனுப்புதல்*

*2019 ஜனவரி (தை) மாதத்தின் கருப்பொருள்:*

# *கிறிஸ்துவில் நம்மை இணைக்கிறது*

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: ஆண்டவரின் திருமுழுக்கு சனி 12-01-2019 - ஞாயிறு 20-01-2019**
எசாயா : 40: 1-5, 9-11 தி.பா: 103: 1-2, 3-4, 24-25, 27-28, 29-30 தீத்து: 2: 11-14; 3: 4-7 லூக்கா : 3: 15-16, 21-22
**"என் உயிரே ஆண்டவரைப் போற்றிடு" - திபா 103**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 12 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித பெனடின் 4) | |
| ஞாயிறு | 13 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (லூர்து அன்னை - சாகா)<br>திருப்பலி (ஆ) (புனித கத்தெரின்)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 மணி தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| திங்கள் | 14 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 15 | காலை திருப்பலி நடைபெறாது (அனைத்து ஒப்புக்கொடுத்தலும் CAPA வில் ஒப்புக்கொடுககப்படும்) | | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 16 | | | |
| வியா | 17 | | | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 18 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) அன்னை வேளாங்கண்ணி – காடோங்*** |

**பொதுக்காலம் 2ஆம் ஞரிறு (ஆண்டு 3)**
**எசா**:62:1-5, **திபா** 95:1-2(அ) 2ஆ-3, 7-8(அ) 9-10(அ) 1**கொரி**: 12:4-11; **யோ**:2:1-11
**"அனைத்து மக்களுக்கும் ஆண்டவரின் வியத்தகு செயல்களை அறிவியுங்கள்" திபா 95**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 19 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித ரோஸ் - மாகரெட்) | |
| ஞாயிறு | 20 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (புனித சிசிலியா)<br>திருப்பலி (ஆ) (ம.கல்வி ஆரம்பபள்ளி)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 மணி தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

## 2018 *டிசம்பர் (மார்கழி) மாத செய்திகள் / நிகழ்வுகள்*

1) பங்கு காணிக்கை:
அ) 05/06 ஜனவரி 2019 ரிம:10,643.45
ஆ) சமூக அக்கறைப் பணிக்குழு ரிம: 6,914.40
இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**2) சீனப்புத்தாண்டு விருந்து - இடம்: ரீஜண்ட் ஹால்:**
நாள்:03-03-2019 நேரம்:பகல்:12.30
டிக்கெட்டுகள் விற்பனையில் உள்ளன. விலை ரிம:50.00
**தொடர்புக்கு:** டோரீன் (017-3326007) பமேலா (016-630 6196) நாதன் (012-6840750)

**திருமண அருளடையாளக் கொண்டாட்டம்**
**ஜோன் மெய்னார்ட் & லிசா டியானா 19-1-2019 காலை 11.00**
**சாமுவல் பிரான்சிஸ் & கேத்ரீனா 19-1/2019 பகல் 3.30**

- **திருமணம் புரிய இருப்போரின் கவனத்திற்கு**: குறைந்தது ஒரு ஆண்டுக்கு முன்பாக, விண்ணப்ப படிவத்தைப் பங்கு அலுவலகத்தில் பூர்த்தி செய்தபின் குருவானவரை சந்திக்க தேதியை முன்பதிவு செய்துகொள்ளுங்கள் 2019 ஆம் ஆண்டுக்கான திருமண முன் தயாரிப்புப் பயிற்சிகள் விரைவில் தொடங்க உள்ளன.
- **திருவழிபாட்டுப் பொருட்கள் விற்பனை:**
  அ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (ஆங்கிலம்) ரிம:6.00
  ஆ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (தமிழ்) ரிம:5.00
  இ) 2019 விவிலிய நாட்குறிப்பு (ஆங்கிலம்/தமிழ்) ரிம:20.00

**மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்**
**அ) சவரியம்மா ரத்னம் (இறப்பு:01/1/2019)**
**ஆ) திரேசா சென் யு சூ(இறப்பு:04/1/2019)**
**இ) மரிய செல்வம் கெங்கன்(இறப்பு:8/01/2019)**
**ஈ) மைக்கல் குழந்தேசு (இறப்பு: 11/01/2019)**
***முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!***

இன்று திருப்பலியை வழி நடத்திய **சாகா சிற்றாலய அதிச** வினருக்கு நமது நன்றிகள்

"சிறப்பு தூதுரைப் பணி ஆண்டு"

## திருமுழுக்குப் பெற்று அனுப்புதல் : இவ்வுலகில் திரு அவை ஒரு தூதுரைப்பணி

- **சிறப்பு தூதுரைப்பணி** ஆண்டை வருகின்ற 13-1-2019 (ஆன்டவரின் திருமுழுக்கு ஞாயிறு) அன்று அதிகாரப்பூர்வமாக தொடங்கி 31-10-2019 நிறைவு செய்ய இருக்கிறோம். உங்களுடைய விண்மீனைக் கண்டுகொண்டு இன்றே தூதுரைப்பணியை தொடங்குங்கள்.
- **உருவாக்கப் பயிற்சி உரை**: "இன்றைய உலகில் தூதுரைப்பணியின் சீடர்கள்" வழங்குபவர்: ஜூட் அந்தோன்(கோலாலம்பூர்) நாள்:21-01-2019(திங்கள்-தைப்பூச பொது விடுமுறை) உருவாக்கப் பணிக்குழு மற்றும் தூய ஆவி அருங்கொடை பணிக்குழுவினர் இணைந்து இதை ஏற்பாடு செய்கின்றனர். கட்டணம்: ரிம:10/-
- **ராக்கேலின் திராட்சைதோட்டம்**: கருக்கலைப்பினால் மன அழுத்தத்தில் இருப்போருக்கு அதிலிருந்து விடுபட ஓர் அரிய வாய்ப்பு: 3நாள்/2 இரவு - தங்கியிருந்து தியானத்தில் கலந்துகொள்ள அழைக்கிறோம். இடம்: பினாங்கு நாள்:15-17 மார்ச்/கோலாலம்பூர் 21-23 ஆகஸ்ட் 2019. பதிவுக்கு இறுதி நாள்:முறையே: மார்ச் 1 & ஆகஸ்ட் 8. - இந்த தியானத்தில் கலந்துகொள்ளும் பங்கேற்பாளர்கள் இறைவனின் இரக்கத்தையும் அவரின் அளவற்ற அன்பையும் குணமளிக்கும் அருளையும் பெற்றுக்கொள்ள இது ஒரு அரிய வாய்ப்பு: தொடர்புக்கு: மேரி (016-419 0538)
- **உலக இளைஞர் தினம்(பனாமா)** இதில் பங்கு பெறும் அனைத்து பங்கேற்பாளர்களையும் நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம். குறிப்பாக நமது பங்கில் எவ்லின் மோசஸ்(சாகா) செல்கிறார். அவருக்காக செபிப்போம்.
- **மறைக்கல்வி வகுப்புகள்** தொடங்கிவிட்டன. இன்னும் பதிந்துகொள்ளாதவர்கள் தயவு செய்து அந்தந்த வகுப்புகளுக்கு சென்று பதிந்து கொள்ளவும். மேல் விவரங்களுக்கு சூசை செல்வ நாதன்(012-9036581)
- **கிறிஸ்துவ ஒற்றுமை வாரம் - செப வழிபாடு( ஜனவரி 18-25,2019)**
  ஜனவரி 17(வியாழன்) கோலாலம்பூர் புக்கிட் கியாரா லூத்தரன் ஆலயம் இரவு 8.00
  ஜனவரி 25(வெள்ளி) சிரம்பான் மெத்தோடிஸ்ட் ஆலயம், இரவு 8.00 மணி.
  அனைத்து சமயங்களுக்கிடையிலான பணிக்குழுவினரின் உறுப்பினர்கள், திருவழிபாட்டு குழு, பாடல் குழு மற்றும் இளைஞர்கள் இதில் உதவி செய்கின்றனர். பங்கு மக்கள் அனைவரையும் வரவேற்கிறோம். தொடர்புக்கு: கிறிஸ்டோபர் கே. 019-6216 194

- **ஜனவரி 14-17** குருக்களின் ஆண்டு மேய்ப்புப்பணி மா நாடு ((***CAPA***)
- **ஜனவரி 19 & 20 பொங்கல் திரு நாள்**
  19–01–2019 (சனி) மாலை 6.30 மணிக்கு – "பொங்கல் கலை இரவு" – ஆலய மண்டபம்
  20–01–2019 (ஞாயிறு) காலை 7 மணிக்கு திருப்பலி, நண்பகல் 2.30 முதல் மாலை 7 மணி வரை தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள், கலாசார நிகழ்வுகள், சிறப்புப் பட்டிமன்றம் தலைப்பு : இன்றைய காலத்தில் செல்போன்கள் (Cell Phone) தொல்லையா? துணையா? தொடர்ந்து தேநீர் விருந்து இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
  **கலை கலாச்சார நிகழ்வுகள்/பட்டிமன்றம்/ தே நீர் விருந்துபசரிப்பு**( மண்டபத்தில்)
- **ஜனவரி 23(புதன்) அதிச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இடம்:** தேவாலய மண்டபம், இரவு 8.00
- **ஜனவரி 25(வெள்ளி)** கிறிஸ்துவ ஒற்றுமை வாரம் - செப வழிபாடு-சிரம்பான் மெத்தோடிஸ்ட் ஆலயம், இரவு 8.00
- **ஜனவரி 27 (ஞாயிறு)** ரஹாங் -புனிதவனத்து சின்னப்பர் சிற்றாலய திருவிழா -நற்கருணை ஆராதனை/திருப்பலி/ஒன்றுகூடல்
- **ஜனவரி 27 (ஞாயிறு)** - மறைக்கல்வி ஞாயிறு